**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 31.07.2025

SC. 32/2023

அ.சா 8 – சரவணன், காவல் ஆய்வாளர், மேற்கு மண்டலம் , கோயமுத்தூர்

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 31 ம் நாள் **சரவணன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தந்தை பெயர் | மாணிக்கம் |
| வயது | 55 | கிராமம் | கோயம்புத்துர் |
| வட்டம் | கோயம்புத்துர் | மாவட்டம் | கோயம்புத்துர் |

**முதல் விசாரணை : –**

**( 1 முதல் 3 வரையிலான எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

நான் தற்போது மேற்கு மண்டலம் கோயமுத்துர் மாவட்ட காவல் அலுவலக சிறப்பு பிரிவில் V.R ல் காவல் ஆய்வாளராக இருந்து வருகிறேன். நான் கடந்த 11.07.2021 ம் ஆண்டு உத்தனப்பள்ளி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ஓசூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் , அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பசவராஜ் ( வயது 58 ) த/பெ லஷ்மையா என்பவர் மேல் சிகிச்சைக்காக குணம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்கையில் இருந்த சூளகிரி வட்டம் , சப்படி அஞ்சல் , கிருஷ்ணம்மா கொத்துர் கிராமத்தை சார்ந்த லஷ்மையா என்பவரது மகன் பசவராஜ் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண் 138/2021 ச/பி 341 , 294 (பி), 324, 307 இதச பிரிவாக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த புகார் வாக்குமூலம் **அ.சா,ஆ 8** ஆகவும், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 9** ஆக பதிவு செய்யப்படுகிறது.

முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தின் அசலை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ராயக்கோட்டை வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

முதல் தகவல் அறிக்கையில் 2 வது பத்தியில் 6 வது வரியில் பசவராஜ் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து பகல் 13.00 மணிக்கு வந்து வழக்கு பதிவு செய்யும் பின்வருமாறு என்று கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால், அது எண் பிழையாக உள்ளது. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். புலன் விசாரணை அதிகாரியின் விசாரணையின் போது பகல் 13.00 மணியை போல் வழக்கு பதிவு செய்து தான் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையின் போது மேற்படி எண் பிழையை பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். நான் எண்பிழை ஏற்பட்டதாக புதிதாக இன்று ஏற்கனவே ஏற்பட்ட பிழையை சரிசெய்யும் பொருட்டு கூறுகிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை நான் தான் பெற்றேன். அந்த மருத்துவ நமுனா அனுப்பப்பட்டதா இல்லை என்று எனக்கு தெரியாது. பசவராஜ் என்பவர் மேல் சிகிச்சைக்காக ஒசூர் அரசு மருத்துவமனையில் இருந்து சென்று விட்ட விவரத்தை அங்கு பணிபுரியும் காவலர் என்னிடம் தெரிவித்தார். நான் அது பற்றிய விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். குணம் மருத்துவமனையில் இருந்து தனியாக காவல் நிலையத்திற்கு தகவல் வந்ததா இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. குணம் மருத்துவமனையில் தகவல் வந்ததாக முதல் தகவல் அறிக்கையில் தகவல் எதுவும் இல்லை என்றால் சரிதான். குணம் மருத்துவமனைக்கு சென்று விசாரித்த பின்னர் தான் பசவராஜ் பற்றி தெரிந்து கொண்டேன். பசவராஜ் குணம் மருத்துவமனையில் இருந்ததை விசாரித்து தெரிந்து கொண்டதை பற்றி புலன் விசாரணை அதிகாரியிடம் குறிப்பாக சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை 11.07.2021 ம் தேதி இரவு 10.00 மணியை போல் நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக

அவரின் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உத்தனப்பள்ளி - ஓசூர் நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும் . புகார் வாக்குமூலம் யாரால், எங்கு வைத்து, எந்த தேதியில் எத்தனை மணியை போல் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் , புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் புகார்தாரரின் கையொப்பமான அ.சா.ஆ 1 ஆன தெலுங்கு மொழியில் கையொப்பம் இட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வகையில் புகார் தாரருக்கு எழுத படிக்க தெரியும் என்ற விவரம் புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் நிலம் சம்மந்தமாக கிருஷ்ணமூர்த்திக்கும் எங்களுக்கும் பிரச்சனை உள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொய்யான சங்கதிகளை கூறி கொடுத்த புகார் வாக்குமூலத்தை நான் சரிவர விசாரிக்காமல் வழக்கு பதிவை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதி , இடத்தில் வைத்து புகார் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு கலந்து ஆலோசிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து தவறான விவரங்களை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur